கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

ஆனி மாத இதழ்
NEWS BULLETIN
JUNE 2024
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

.

நாள்	நிகழ்வு
2002 முதல் **22** ஆண்டு களாக	கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக பாடசாலை சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 38-44 Binley Road, Coventry CV3 1JA முகவரியில் நடைபெற்று வருகின்றது
13/07/ 2024	வருடாந்த இல்ல விளையாட்டு விழா LYNG HALL SCHOOL, BLACKBERRY LANE, COVENTRY CV2 3JS 10AM-5PM. **தமிழ்ப் பாடசாலையின் கோடைகால விடுமுறை ஆரம்பம்.**
07/09/ 2024	தமிழ்ப் பாடசாலை மீண்டும் புதிய கல்வியாண்டுக்காக ஆரம்பமாகும்.

SATURDAY	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	1.00pm – 4.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	1.00pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 2.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	10.00am – 2.00pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	10.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	10.00am – 2.00pm
Tamil	10.00am – 12.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D)	10.00am – 12.00am






பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் தமிழ்மொழிப் பரீட்சைகள் 2024

வருடம் தோறும் நடைபெற்று வரும் பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் (BRITISH TAMIL EXAMINATION BOARD) தமிழ்மொழிப் பரீட்சைகள் இந்த வருடமும் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. பேச்சுப் பரீட்சை 15,22/06/24 ஆகிய தினங்களில் தமிழ்ப் பாடசாலையிலும், கேட்டல், வாசித்தல், எழுதுதல் போன்ற பரீட்சைகள் 29/06/2024 SYDNEY STRINGER SCHOOL, COVENTRY யிலும் நடைபெற்றன. கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்கள் மட்டுமன்றி பிரத்தியேக மாணவர்களும் பல இடங்களிலிருந்து வந்து பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.







தேரேறி வந்த கந்தன் திருவடியில் கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களின் நடனம்

09/06/2024 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்ற கொவன்றி ஈழக் கந்தன் ஆலய இரதோற்சவ நிகழ்வில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக நடன ஆசிரியை களில் ஒருவரான பரதக் கலா வித்தகர், நாட்டிய கலாநிபுணா, கலைமானி ஸ்ரீமதி சத்தியகௌரி ஜெயசீலன் அவர்களின் மாணவிகளான செல்வி மோனிக்கா ஜெய்கணேஷ், செல்வி ஆரதி சியாமளன் ஆகிய மாணவிகள் நடன நிகழ்வை வழங்கியிருந்தனர்.





ஈழத்துப் புலமைகள் பாகம் 21

கடந்த இதழிலே, யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்த தமிழறிஞர் சந்திரசேகர பண்டிதர் அவர்களைப் பற்றி பார்த்திருந்தோம்.
இந்த இதழிலே, யாழ்ப்பாணம் மானிப்பாயிலே அருணாசலம் பிள்ளை என்ற செல்வந்தர் ஒருவரின் மகனும், தமிழறிஞராக திகழ்ந்தவருமான சுவாமிநாதர் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.

சிலாபத்துறையிலே முத்துக் குளிக்கும் அனைவரினது முத்துக்களையும் வாங்கி வெளிநாட்டவர்க்கு வியாபாரம் செய்துவந்த வணிகரான முத்துசாமிப்பிள்ளை அவர்களின் அண்ணனும், இலங்கையின் சட்டசபையிலே நீண்டகாலமாக அங்கத்தவராக இருந்து வந்த ஏலேலசிங்கம் முதலியாரின் தந்தையும், ஆவார். சுவாமிநாதர் சங்கீதம் கற்பதற்கு முன்பே மானிப்பாய் வேரகப் பிள்ளையார் கோயிலிலே கந்தபுராணம் பாடி வந்தாராம். அப்போது இராகம் தவறியமையால், புராணத்திற்கு விளக்கம் அளித்தவர் ஏளனமாக பேசினாராம். அதனால் சுவாமிநாதர் இந்தியா சென்று முறைப்படி சங்கீதம் கற்றுப்பின் ஊர் திரும்பினரென்றும் அதன்பின் பல நாடகங்களில் பாடி மேடை ஏற்றினாரென்றும் கூறுவர்.

இவரது திறமையை வெளிப்படுத்தும் முகமாக இராமாயண நாடகத் தொடக்கத்தில், செல்வச் சன்னதி முருகனை வேண்டிப் பாடிய பாடல் ஒன்றினைத் தருவோம்.

“ஆண்டுகொண் டவனிமுத லன்றிலங்
கையிலுறையும் அரியரா வணனிசிகரன்
அழகு செறி சீதையைச் சிறை வைக்க
ராமனா யவதரித் திரு மாயவன் தூண்டவனு
மான் சென் றறிந்துவன் தேசொல்ல
தொரு கடலையணை கட்டியே
சுக்கிரிப னோடு சேனை சூழ்ந்திட
விலங்கையிற் றொகுதியோடு போயடைந்து
வேண்டிய மருக்குவரு தம்பியும்
பிள்ளைகளும் வெகி மூல பலமு மழிய
விறலிராவணன் மடிய நொடியிலே நொசிறை
மீட்ட வீரராகவன் மருமகனே நீண்ட பவன்
பிலையெனினு மாண்டுகொண்டிருமடிமை
நீயருளென க்குதவுவாய்
நிகரில் தொண்டை மானாற்றில் நிலவு சந்
நிதிமேவும் நிமல குருபர முருகனே”

ஆக்கம்
ஆசிரியர் திரு மாணிக்கம் தவத்துரை